## பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கம்

## துரிதமாக தீர்வு காணப்பட வேண்டிய கல்விப் பிரச்சினைகள்

பல்கலைக்கழக கல்வித் துறையின் நலன் தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கம் இலங்கையில் தேசிய பல்கலைக்கழகங்களும் அதேபோன்று ஆரம்ப, இடைநிலைக் கல்வித் துறையானது மாணவர்களை உயர் கல்விக்கு தயார்படுத்துவது பற்றி ஆழமாகக் கவனம் செலுத்தியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகம் உட்பட ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களும் சகல துறைகளையும் சார்ந்த அதாவது சமூக விஞ்ஞானம், தூய மற்றும் பிரயோக விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல சங்கம், சட்டம், அழகியற் கலை என்ற துறைகளில் நிபுணர்களை தொடர்ந்தும் உருவாக்கி வருகின்றது. அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தி பங்களிப்பு செய்து வருகின்றனர். இது சமூகத்தில் சகல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அமைகின்றது. இலங்கையில் வளங்கள் வரையறுக்கப்பட்டதாக இருந்த போதிலும் மக்களின் வாழ்க்கைத் தரம், ஆரோக்கியம், இலவசக் கல்வி என்பவற்றை வழங்குவதில் சிறந்த உதாரணமாக விளங்குகின்றது.

அரச கல்விக்கான முதலீட்டை அதிகரிக்குமாறு கோரி பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளணம் தொடர்ந்து ஏழு வாரங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றது. இலங்கையில் ஆரம்ப, இடைநிலை, மூன்றாம் நிலை கல்வியின் எதிர்காலம் பற்றி முக்கிய கவனம் செலுத்தி பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளணத்துடன் (FUTA) கலந்துரையாடலை மேற்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடமும், உயர் கல்வி அமைச்சிடமும் கேட்டுக் கொள்கின்றது. தேசிய பல்கலைக்கழக அமைப்பில் உள்ள முக்கிய பிரச்சினைகளான உயர் தகைமை உடையவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கவும் அவர்களைத் தக்கவைத்துக் கொள்வதுடன் அவர்களது வேதனத்தை உயர்த்தவது தொடர்பாகவும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

மேலும் Z புள்ளி தொடர்பான பிரச்சினைக்கு உட்பட்டு மனஉழைச்சலுக்கும், வேதனைக்கும் உட்பட்டுள்ள நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் துரிதமாக தீர்வு பெற்றுக் கொடுக்குமாறு பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடமும் உயர் கல்வி அமைச்சிடமும் கேட்டுக் கொள்கின்றது.

கல்வித்துறையின் தற்போதைய பிரச்சினைகளுக்கு நேர்மையானதும், நியாயமானதுமான சகல தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை முன்வைப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உதவ முன்வர வேண்டுமென பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது.